# தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில்

## பேரறிஞர் அண்ணா அவர்களின் 107வது ஆண்டு பிறந்த நாள் விழா!

## உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்க்கு

## பேச்சுப் போட்டி – கட்டுரைப் போட்டி – கவிதை ஒப்பித்தல்

## 2016 பிப்ரவரி 6, 7 ஆகிய தேதிகளில்

# மாநில அளவிலான இறுதிப் போட்டிகள்

## தளபதி மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளினையொட்டி, தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப் போட்டி – கட்டுரைப் போட்டி – கவிதை ஒப்பித்தல் ஆகிய போட்டிகள் தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு 107வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான போட்டிகள் கடந்த 2015 நவம்பர் 14, 15 மற்றும் 27, 28 ஆகிய தேதிகளில் மிகவும் எழுச்சியோடு நடைபெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

### இறுதிப் போட்டிகள்

மாநில அளவிலான இறுதிப் போட்டிகள் **2016, பிப்ரவரி 6, 7 (சனி, ஞாயிறு)** ஆகிய இருநாட்கள் **சென்னை, சோழிங்கநல்லூர், ஓ.எம்.ஆர். – இ.சி.ஆர். இணைப்புச் சாலை, அக்கரையில் அமைந்துள்ள ஜி.பி.ஜனராஜன் திருமண மண்டபத்தில்** தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டனை சார்பில் நடைபெறும்.

### இறுதிப் போட்டியில் பங்கேற்பவர்கள்

மாவட்ட அளவிலான பேச்சு, கட்டுரை மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டிகளில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி அளவில் முதலாவது, இரண்டாவது இடங்களுக்கு தேர்வு செய்யப் பெற்ற இருவர்.

# இறுதிப் போட்டிகள்

## பேச்சுப் போட்டி

தலைப்புகள் : 1) அண்ணாவின் கனவுகளும், கலைஞரின் செயல்களும்

2) இட ஒதுக்கீடும் திராவிடப் பெருந்தலைவர்களும்

இரண்டு தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் 7 நிமிடத்திற்கு மிகாமல் பேச வேண்டும்.

## கட்டுரைப் போட்டி

தலைப்புகள் : 1) மாணவர்கள் நலனில் தி.மு.க.

2) காலத்தால் அழியாத கலைஞர் அரசின் சாதனைகள்

ஆகிய இரண்டு தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் 100 வரிகளுக்கு மிகாமல் எழுத வேண்டும். பேனா மட்டும் எடுத்து வரவேண்டும். தாள்கள் போட்டி அறையில் தரப்படும்.

## கவிதை ஒப்பித்தல் போட்டி

1) இன உணர்வும் மொழிப்பற்றும்! எனும் தலைப்பில் 'திருவள்ளுவர் தூங்கிக் கொண்டிருந்தார்' என தொடங்கி 'சூடு எங்கே பிறந்தது ? சொரனை எங்கே பிறந்தது ?' என்று முடியும், 17.9.1995 அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதை

2) "புறநானூற்றுத் தாய் – 2" எனும் தலைப்பில்
1955 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய
'காவிரி தந்த தமிழகத்துப் புது மணலில்' எனத் தொடங்கி '
திருமகளே! இந்தப் பூவுலகில் ?....' என முடியும் கவிதை

ஆகிய இரண்டு கவிதைகளில் ஏதேனும் ஒரு கவிதையை ஒப்பித்தல் வேண்டும். இசையுடனோ அல்லது ஒப்பனை அணிந்தோ கவிதையை ஒப்பித்தல் கூடாது.

# மாநில அளவிலான இறுதிப் போட்டிகள்

இறுதிப் போட்டி ஒவ்வொன்றிலும் வெற்றி பெறும் பள்ளி மாணவ, மாணவியருக்கு.....

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | ரூ. 25,000/– |
| இரண்டாம் பரிசு | : | ரூ. 15,000/– |
| மூன்றாம் பரிசு | : | ரூ. 10,000/– |
| ஆறுதல் பரிசு | : | ரூ. 5,000/– வீதம் (10 பேருக்கு) |

தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும்.

குறிப்பு : மூன்று போட்டிகளும் பிப்ரவரி 6ஆம் தேதி காலை 8 மணிக்கு துவங்கும்.

"அன்பகம்''
சென்னை – 600 018.
நாள் : 27–1–2016.

**மு.க.ஸ்டாலின்,**
நிறுவனர்,
தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை.